1981 பிப்ரவரி 2]

காஞ்சிபுரத்தில் நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள்

(*வினா எண். 148 திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காஞ்சீபுரத்தில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டி கொடுக்க வேண்டுமென காஞ்சி வழக்கறிஞர்கள் சங்கமும் பொது மக்களும் கோரி உள்ளனரா ?

(ஆ) இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) காஞ்சீபுரத்தில் சார்பு நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடம் ஒன்று ரூ. 14,00,000 செலவிலும், இரண்டு சார்பு நீதிபதிகளுக்கு குடியிருப்பு கட்டிடம் ரூ. 1,76,000 செலவிலும், இரண்டு மாவட்ட முன்சீப்புகளுக்கு குடியிருப்பு கட்டிடம் ரூ. 1,18,000 செலவிலும் கட்டுவதற்கு தேவையான ஆணைகளை அரசாணை எண் 2291, உள்துறை, தேதி 5-9-1980 இல் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

[துணை வினா இல்லை.]

சிறைச்சாலைகளில் சிற்றுண்டி வசதி

* வினா எண் 149—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறைச் சாலைகளுக்குள் கைதிகள் பயன்படுத்தும் வகையில் சிற்றுண்டி சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம். கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர் மற்றும் சென்னையில் உள்ள மத்திய சிறைகளில், ''கைதிகளின் சிற்றுண்டிச்சாலை'' அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சில மத்திய சிறைச்சாலைகளில் அவ்வகை சிற்றுண்டிச்சாலைகளை அமைத்திருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுவாக எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் முறைப்படி இல்லாவிட்டாலும் சிற்றுண்டிச் சாலைகள் நடைபெற்று வருவதை சிறைச்சாலைக்குச் சென்றவர்கள் நன்றாக அறிவார்கள். எல்லா மத்திய சிறைச்சாலைகளில் நல்ல முறையில் அத்தகைய சிற்றுண்டிச் சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?